# பூகோள அரசியலில் இஸ்லாமிய நாகரிகமும் நாடுகளும் - சர்வதேச அரசியலினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

[1]Thuvaraka Thavaththurai, [2]Mahalingam Mayuran

[1]Department of Geography, [2]Department of Political Science, Univers ity of Peradeniya
mayu8lux@gmail.comMa;Tr; RUf;fk;

இருபத்தியோராம் நூற்றாண்டிலே வல்லரசுகள் மற்றும் பிராந்திய அரசுகளின் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கப் போட்டிக்கு உரிய களமாக அமையப்பெற்ற பிராந்தியங்களாக மத்திய கிழக்கு மற்றும் மேற்காசிய நாடுகள் காணப்படுகின்றன. இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிரான மேற்குலகின் போர் வியூகம் நீண்ட வரலாற்றினைக் கொண்டது. சிலுவை யுத்தம் என்ற பெரும் மனித அழிவினை ஏற் படுத் திய போரானது இஸ் லாமிய கிறிஸ் தவ நாகரிக மோதலாகவே அளவிடப்படுகின்றது. இதன் ஆரம்பம் முதல் இன் றைய சூழல் வரை ஏதோ ஒரு வகையில் இஸ்லாமிய நாடுகளின் அடிப்படைகளை மேற்குலகம் சுரண்டி வருகின்றது. துருக்கிய ஒட்டமன் இராட்சியத்தின் வீழ்ச்சியுடன் மேற்குலகத்தின் எழுச்சி இஸ்லாமிய நாடுகளையும் அதன் நாகரிகத்தினையும் பகுதிகளாக துண்டுபோட முயல்கின்றது. அதில் முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களும், பனிப்போரும் மேற்குலகிற்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுத்திருந்தன. பனிப்போரின் பின்பான புதிய உலக ஒழுங்கின் கீழ் இஸ்லாமிய நாடுகளையும், நாகரிகத்தினையும் முதல் எதிரியாக மேற்குலகம் கருதியது. இந்த ஆய்வானது இஸ்லாத்திற்கு எதிரான உலக அணிதிரட்டலை அடையாளப் படுத்துவதுடன் இதிலிருந்து மீள்வதற்கான உபாயங்களை கண்டறிய முனைகின் றது. ஒரு பலமான, இறுக்கமான நிறுவனக் கட்டமைப்புக்களை உள்வாங்காத எதிர் முரணியத்துடன், விரிபாக்கத்தினையும், நிலைத்திருப்பினையும் கொண்டிருக்கின்ற நாகரிகமாக, இனமாக, பண்பாடாக இஸ்லாம விளங் குகின்றது. வல்லரசுகள் தமக்குத் தேவையான மூலப் பொருட்களில் ஒன்றான எண்ணெய்வளத்தினை சுரண்டிப் பெற்றுக் கொள்வதற்கும் அதற்கான கடல்வழிப் பயணத்தினகட்டுப்பாட்டை தமக்கு கீழ் கொண்டு வரவும் இப்பிராந்தியங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. இப்பிராந்தியங்களில் தமக்குச் சார்பான ஆட்சியினை ஏற்படுத்துவதிலும் அதனை தக்கவைத்துக் கொள்வதிலும் பல தலையீடுகளையும் போக்குகளையும் அப்பிராந்தியங்கள் மீது திணிக்கின்றன. அந்த வகையில் மத்திய கிழக்கு மற்றும் மேற்காசிய நாடுகளின் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகவே அரபு வசந்தம் என்பதும் காணப்படுகின்றது. இங்கு மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப சில இஸ்லாமிய நாடுகள் செயற்படுகின்றமை என்பது ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது. உலகிற்கு நியாயத்தினையும் , மனித உரிமைகளையும், ஜனநாயகத்தினையும் போதிக்கும் மேற்குலகம் இஸ்லாத்திற்கு எதிரான வன்முறையினை கட்டவிழ்த்து விடுவது எந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியும் என்ற வினாவும் எழுகின்றது. மேலும் இந்து, பௌத்தம், சீன நாகரிகங்களை தன்னுடன் கூட்டுச்சேர்த்துள்ள மேற்குலகம் தனது எதிரியான இஸ்லாத்தினை தோற்கடிக்க முயல்வதும், ஏனைய நாடுகளுக்கும் நாகரிகங்களுக்கும் எதிராக இஸ்லாத்தினை தூண்டி விடுவதும ரச்சினைக்குரியதே. இவ் ஆய்வானது புத்தகங்கள், சஞ்சிகைகள், இலக்கியங்கள், முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளை பயன்படுத்தியுள்ளது. இறுதியாக இதிலிருந்து விடுபடுவதற்கு இஸ்லாமிய நாடுகள் பின்பற்ற வேண்டிய உபாயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்கள்:** இஸ்லாமிய நாடுகள், இஸ்லாமிய நாகரிகம், அரபு வசந்தம், பூகோள அரசியல், வல்லரசுகள்

## அறிமுகம்

கி.மு 2300ஆம் ஆண்டளவில் உலகின் முதலாவது பேரரசான ஆக்காட் பேரரசு, இன்றைய ஈராக்கியப் பகுதியிலிருந்து முதல் முறையாக ஐரோப்பா நோக்கித் துருக்கி வரை படர்ந்தது. நாகரிகங்களுக்கிடையேயான யுத்தங்களுக்கான முதலாவது புள்ளி இதுதான். இதைத் தொடர்ந்து பின்பு இருபக்கங்களிலிருந்தும் பல யுத்தங்கள் நிகழ்ந்தன. பாரசீகப் பேரரசன் டறியஸ் கி.மு 490ஆம் ஆண்டு கிரேக்கத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பு, பின்பு கிரேக்கரால் தோற்கடிக்கப்பட்டது. இதன் பின்னர், அடுத்து வந்த பாரசீகப் பேரரசன் சேக்கீஸ் என்பவரும் கிரேக்கம் மீது படையெடுத்தார். இவ்வாறு நீண்டு வளர்ந்து காலப்போக்கில் கி.பி பதினோராம் நூற்றாண்டில் பாரிஸிலிருந்து ஜெருசலேம் நோக்கி கிறிஸ்தவர்கள் மேற்கொண்ட சிலுவை யுத்தம் சுமார் மூன்று நூற்றாண்டுகள் நீடித்தது.

பிற்காலத்தில், துருக்கியில் இருந்து கிரேக்கத்திற்கூடாக ஐரோப்பா நோக்கி இஸ்லாமியப் படையெடுப்பு ஏற்பட்டது. அவ்வாறே, ஜோர்டானில் இருந்து எகிப்து, லிபியா, அல்ஜீரா, மொறாக்கோ ஆகிய ஆபிரிக்க நாடுகளுக்கூடாக ஐரோப்பிய நாடான ஸ்பெயினை இஸ்லாம் சென்றடைந்தது. மறுபுறத்தில் ஆசியாவின் கிழக்கு நோக்கி ஈரான்,ஈராக், பாகிஸ்தான், இந்தியா என ஒரு படர்ச்சியையும் அதன் கிளையாக ஆப்கானிஸ்தான் மற்றும் பழைய சோவியத் ரஸ்சியப் பகுதிகள் நோக்கியும் இஸ்லாம் படர்ச்சிகள் இடம்பெற்றன. மேற்காசியாவில் இருந்து (மத்திய கிழக்கிலிருந்து) கிழக்கு, தென் கிழக்கு ஆகிய திசைகளிலும் இந்தியா உட்பட மலேசியா, இந்தோனேசியா வரையும் இஸ்லாம் படர்ந்திருப்பதனையும், மேற்கு நோக்கி ஆபிரிக்காவூடாக, அதாவது, வட ஆபிரிக்கா முழுவதையும் ஊடறுத்து ஸ்பெயின் வரை, அதாவது, ஒரு கண்டத்தைக் கடந்து ஐரோப்பாவை இஸ்லாம் அடைந்திருப்பதனைக் காணலாம். இஸ்லாம் அல்லது மேற்காசிய ஆதிக்கம் பல முனைகளில் இருந்து பல கண்டங்களையும் நோக்கிப் படர்ந்திருக்கின்றது. குறிப்பாக மேற்குலகின் ஆதிக்கத்திற்கு அது பெரும் சவாலினை ஏற்படுத்தி விட்டது




Source:https://www.thinglink.com/scene/704426883768385537

**இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிரான வல்லரசுகளின் வியூகங்கள்**

"சாதாரண மக்கள் கூட்டத்தினைவிட விரிவான, உயர்ந்த மக்கள் கலாசாரத்தினைக் கொண்ட ஒரு சமூகம் உயர்ந்த தன்மையினைக் கொண்டது என்பதனை சுட்டிக்காட்டுவதே நாகரிகம் ஆகும். மொழி, சமயம், வரலாறு, பழக்கவழக்கங்கள், பொறுப்புக்கள், சுய அடையாளம் போன்ற பொதுவான விடயங்களே அதனைத் தீர்மானிக்கின்றன" என நாகரிகம் தொடர்பான விளக்கத்தினைத் தருகின்றார் சாமுவேல் ஹண்டிங்டன்.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்குரான், அல்ஹதீஸ் போன்றவற்றின் வருகையுடன் உருவான சீரிய சிந்தனைகள், உணர்வுகள், இலட்சியம் என்பவற்றின் பிரதிபலிப்பாக உண்டான அறிவியற் கலைகள், நடை, உடை, பாவனை, பழக்கவழக்கம் போன்றவற்றில் ஏற்படும் வெளிப்பாடே இஸ்லாமிய நாகரிகம் ஆகும். அதாவது, இஸ்லாமியச் சிந்தனைப் போக்கிற்கும், வாழக்கைப் போக்கிற்கும் முழுமையாக இயைந்து செல்லும் நாகரிகம் மட்டுமே இஸ்லாமிய நாகரிகம் எனப்படும்"

இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிரான மேற்குலகின் போர் வியூகம் நீண்ட வரலாற்றினைக் கொண்டது. சிலுவை யுத்தம், மங்கோலியப் படையெடுப்பு என்பன இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிராக தொகுக்கப்பட்ட இரு இராணுவப் படையெடுப்புக்களாகும். சிலுவை யுத்தம் என்ற பெரும் மனித அழிவினை ஏற்படுத்திய போரானது இஸ்லாமிய கிறிஸ்தவ நாகரீக மோதலாகவே அளவிடப்படுகின்றது. இதன் ஆரம்பம் முதல் இன்றைய சூழல் வரை ஏதோ ஒரு வகையில் இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளை மேற்குலகம் சுரண்டி வருகின்றது. பனிப்போரின் பின்பான புதிய உலக ஒழுங்கின் கீழ் இஸ்லாமிய நாகரிகத்தினை முதல் எதிரியாக மேற்குலக வல்லரசுகள் கருதின. 1991 முதல் ஈராக் போரும் 2001 ஆப்கானிஸ்தானிலும், 2003 இல் இரண்டாவது ஈராக் போரிலும் மேற்குலகம் அமெரிக்கா தலைமையில் இஸ்லாமிய நாகரிகத்தின்

அடிப்படையினைத் தகர்த்தது. ஆப்கானிஸ்தானிலும்,ஈராக்கிலும் மேற்குலகம் முதலில் அழித்த அம்சமாக நூதனசாலைகள், வரலாற்றுச் சின்னங்கள், பழைய பொக்கிசங்கள் என்பதை நோக்கும் போது நாகரிகத்தினை அழிப்பதே நோக்காக இருந்துள்ளது.

இஸ்லாத்தின் தோற்றம் முதல் ஐரோப்பா மறுமலரச்சியடையும் வரையில் இஸ்லாமிய நாகரிகமே உலகில் தலைசிறந்து விளங்கிய ஒரே ஒரு நாகரிகமாக விளங்கியது. முஸ்லிம்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட அறிவியல் ஆராட்சி முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கு நாடுகள் 15ம் மற்றும் 16ம் நூற்றாண்டுகளில் இராணுவ, பொருளாதார, தொழில்நுட்ப சக்தியாக எழுந்த போது முழு உலகமே அதிர்சிக்குள்ளாகியது. தனது வளர்ச்சிப்பாதையின் முதன்மை எதிரியாக இஸ்லாத்தினையும் முஸ்லிம்களையும் மேற்கத்தேய நாகரிகம் கருதியது. இஸ்லாமிய நாகரிகம் தொடர்பாக மேற்கத்தேய நாகரிகம் கொண்டிருந்த அச்ச நிலையே, அதாவது எதிர்காலத்தில் தனக்கு சவாலாகவரக்கூடிய ஒரே ஒரு நாகரிகம் இஸ்லாமிய நாகரிகம் என்பதனை அது புரிந்துவைத்திருக்கின்றது. இதனால்தான் ஹாவாட் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர், சாமுவேல் ஹன்டிங்டன் நாகரிகங்களுக்கு இடையிலான மோதல் தொடர்பான தனது கருத்தினை பின்வருமாறு கூறியிருந்தார்,

“ மேற்கல்லாத மேற்கைச்சாராத நாகரிகங்களை எதிர்த்துப் போராடு, வெற்றிகொள், அதனைக்கட்டுப்படுத்து. இதுவே புதிய நூற்றாண்டை ஆள்வதற்கான அமெரிக்க அரசியல் தந்திரம்”

இந்து, பௌத்த, சீன நாகரிகங்கள் மேற்குடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு இஸ்லாத்தை தோற்கடிக்க முயல்வதும், ஏனைய நாகரிகங்களுக்கு எதிராக இஸ்லாத்தை தோற்கடிக்க முயல்வதும், ஏனைய நாகரிகங்களுக்கு எதிராக இஸ்லாத்தை தூண்டி விடுவதும் மேற்குலக வல்லரசின் வியூகங்களாக காணப்படுகின்றன. இங்கு வல்லரசுகள் தனித்து கிழக்கு நாகரிகங்களுடன் மோதவில்லை. கீழ்த்திசை நாகரிகங்களை கீழ்த்திசை நாகரிகங்களுக்கு எதிராகவே தூண்டி விடுவதிலும் மேற்குலக நாகரிகத்தின் தீவிரம் காணப்படுகின்றது. பனிப்போர் களத்தில் நிகழ்ந்த இஸ்லாமிய தேசிய அடையாளத்தினை கொண்டிருந்த பாலஸ்தீன மக்களை தீர்வற்ற மக்களாக அரசற்ற மக்களாக, இறைமையோ, சுயநிர்ணயமோ இன்றி சமூகமாக மாற்றியதில் மேற்குலகம் காரணமாகியது. அவ்வாறே காஸ்மீர் மக்களின் சுயநிர்ணயத்தினை அழிப்பதில் மேற்குலக பாணியில் இந்தியாவின் இந்துநாகரிகம் ஆதிக்கம் செலுத்தியது. அதுமட்டுமன்றி 1947 முதல் 1993 வரை பாரிய யுத்தங்கள் ஐந்தில் இந்துநாகரிகம் இஸ்லாமிய நாகரிகம் மீது நிகழ்த்தியுள்ளது.

**இஸ்லாமிய நாடுகளுக்கு எதிரான வல்லரசுகளின் வியூகங்கள்**

உலகில் தற்போது காணப்படுகின்ற 22 இஸ்லாமிய நாடுகள் பெருவாரியாக இஸ்லாமிய மதத்தினைப் பின்பற்றுகின்றன. அதே போல மொழியிலும் அரபு மொழியினையும் இதர சில மொழிகளையும் பேசுகின்றன. பாரசீக நாடான ஈரான் வேறு மொழியாயினும் இஸ்லாத்தினையே பின்பற்றுகின்றது. இங்கு அரபு-இஸ்லாமிய நாடுகள் என்ற அடிப்படையில் 22 நாடுகளும் ஒன்றிணைவதோ அல்லது இஸ்லாம் என்ற அடிப்படையில் ஈரானை உள்ளடக்கி 23 அரசுகளும் ஒருங்கிணைந்து ஓர் இஸ்லாமிய அரசினை உருவாக்கவோ இதுவரை முடியவில்லை. இவ்வாறு

அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்த அரபு-இஸ்லாமிய அரசு மத்திய கிழக்கிலே தோன்றினால் அது உலகின் அரசியல் சமநிலையினை வெகுவாக மாற்றி அமைக்கக்கூடியதாய் அமைந்து விடும். இதனை மேற்குலகமோ வல்லரசுகளோ ஒருபோதும் விரும்பாது.

தேசியவாதம் என்ற சிந்தனையினைப் பரவலாக்குதல் அதாவது, ஒருவர் தனது தாய் நாட்டின் மீது கொள்ளும் அளவுகடந்த பற்று, நம்பிக்கை, விசுவாசம் எனக் கூறப்படுகின்றது. இஸ்லாம் இனம், மதம், மொழி, நிற வேறுபாடின்றி அனைவரும் ஒரே தேசத்தவர் என்றே கருதியது. இக் கோட்பாடின் கீழ் முஸ்லிம்கள் கட்டுண்டு வாழும் வரை அவர்களது ஐக்கியத்தினைக் குலைக்க முடியது எனக்கருதிய மேற்குலகம் அதற்கு எதிராக வைத்த சிந்தனையே தேசியவாதமாகும். இன்று அரேபியரிடையே அரேபிய, சிரிய, குர்திஸ், துருக்கிய தேசியவாதம் என பல தேசிய இனங்கள் தோன்ற ஆரம்பிந்தன.

சியா முஸ்லிம்களுக்கும், சுன்னி முஸ்லிம்களுக்கும் இடையேயான முரண்பாடும், துருக்கி,ஈராக்,ஈரான், சிரியா போன்ற அரசுகளுக்கும் குர்தீஸ் இனத்திற்கும் இடையே உள்ள முரண்பாடும் இஸ்லாமிய மக்களிடையே ஒரு யுத்தத்தினை மையம் கொள்ளச் செய்தன. இங்கு இஸ்லாத்திற்கு எதிரான மேற்குலகின் போர் என்பதற்கு பதிலாக இஸ்லாமியருக்கு எதிரான இஸ்லாமிய போராக மாற்றிவிடப்பட்டது. இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக ஐ.எஸ் என்று சொல்லப்படுகின்ற இஸ்லாமிய அரசினை ஆயுதமுனையில்

கட்டியெழுப்பும் இயக்கம் மத்திய கிழக்கில் உதயமானது. இங்கு இஸ்லாமிய நாடுகளை ஒன்றோடு ஒன்று மோத விடுவதன் ஊடாக இலகுவில் தனது இலக்கினை அடைகின்றது மேற்குலகு.

எழுபதுக்கு மேற்பட்ட நாடுகளினை தேசியவாதம் என்ற பெயரில் தனித்தனி கூறுகளாக்கி தமது நிறுவனங்களுடாக கிறிஸ்தவ மதப்பிரச்சாரங்கள் நடாத்தி முஸ்லிம் நாடுகளில் மதசார்பற்ற சிந்தனையினை புகுத்தியும், முஸ்லிம் நாடுகளின் பொருளாதாரத்தினை சுரண்டியும், மேற்கத்தேயத்திற்கு சார்பான அடிவருடிகளை இஸ்லாத்தில் இருந்தே உற்பத்தி செய்து இஸ்லாத்திற்கு எதிராக அவர்களை சிந்தனை ரீதியாக தூண்டிவிடுகின்ற பணியினை மேற்குலகு செய்து வருகின்றது. இதனைத் தொடர்ந்து விஞ்ஞானம் மற்றும் பகுத்தறிவு சிந்தனையின் பிரதிபலிப்பாக உருவாக்கப்பட்ட ஒரு சிந்தனையே நவீனத்துவம் ஆகும். பகுத்தறிவுக்குப் பொருந்தாத அனைத்தையும் நிராகரித்தல் என்பதே இதன் அடிப்படையாகும்

இஸ்ரேல் நிறுவப்பட்ட முதல் இருபதாண்டுகளில் தமது தாயக நிலத்திலிருந்து துரத்தப்பட்ட ஏழு இலட்சத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் அகதிகளாக நாடு அற்றவர்களாக அகற்றப்பட்டதுடன் பன்னிரண்டு இலட்சம் பேர் கேவலமான இழிந்த வாழ்க்கையினை நடாத்த வேண்டியிருந்தனர். இவர்களது அகதி முகாம் வாழ்க்கை ஏறக்குறைய ஐம்பது வருடங்களாக நீடித்தது. இன்றுமே முழுமையான வாழ்வுக்கு பாலஸ்தீன மக்கள் தயாராகவில்லை. காம்டேவிட் (1979), காஸா ஜெரிக்கோ(1993), வைநிதி உடன்படிக்கை(1998), இருநாட்டு தீர்வுத்திட்டம்(2002) என்றவாறாக சமாதான உடன்படிக்கையின் பட்டியல்கள் நீட்சி பெற்றதேயன்றி பாலஸ்தீன மக்களின் அதிகாரம் நிலைபேறு அடையவில்லை. இவ்வாறே இஸ்லாமிய நாகரிகத்தின் தொட்டிலாக கருதப்பட்ட மேற்கு ஆசியாவில் எழுச்சி பெற்ற தேசிய இன அடையாளங்கள்

சார்ந்த போரட்டங்கள் அழிக்கப்பட்டன அல்லது காலவரையறையின்றி நீட்சிபெற வழிவகுத்தன. மேற்காசிய, ஆபிரிக்க மற்றும் ஆசியப் பிரதேசம் முழுவதும் இஸ்லாமிய தேசிய இன அடையாளம் சார்ந்த தேசிய விடுதலைப் போராட்டங்களின் அழிவுக்குப் பின்னால் வல்லரசுகள் காணப்பட்டது.

மதச்சார்பின்மை என்ற எண்ணக்கருவும் மேற்குலகால் வழங்கப்பட்ட ஒன்றே ஆகும். மதசார்பின்மை என்பது மதம் உட்பட்ட இனம், மொழி, கலாசாரம் என்பன சாராத ஒரு சிந்தனையாகும். அரசியலினை மார்கத்தில் இருந்து பிரிப்பதனையே இச் சிந்தனை நோக்காகக் கொண்டது. உலகமயமாக்கல் என்ற எண்ணக்கருவும் மேற்குலகினால் திட்டமிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இது அனைத்து நாடுகளிடையேயும் காணப்படும் ஒழுக்கம், பண்டம், நடத்தை, சிந்தனை, கலாசாரம் போன்ற அனைத்தையும் ஒன்றாக மாற்றும் அதிபயங்கர சதித்திட்ட முயற்சியாகும்.

கீழத்தேயவாதம் என்ற அம்சத்தினையும் மேற்குலகு திட்டமிட்டு நடாத்தி வருகின்றது. அஹமத் ஸர்பாஸி என்பர் கீழத்தேய வாதம் பற்றிக் குறிப்பிடுகையில் “ முஸ்லிம்களின் சமூகம், மார்க்கம், வரலாறு போன்றவற்றில் அதிகளவான ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய ஐரோப்பாவில் உள்ள ஒரு கூட்டம் கீழத்தேயவாதிகள்” எனவும் “ அவர்களது ஆய்வு முயற்சிகள் கீழத்தேயவாதம்” எனவும் குறிப்பிடுகின்றார்.

**இஸ்லாமிய நாடுகளின் ஒற்றுமையின்மை**

இன்று மத்திய கிழக்கில் இருக்கும் பெட்ரோலிய வளம் இந்த முழு உலகத்திற்கும் சுமாராக 50 முதல் 75 ஆண்டு வரையான காலப்பகுதிக்குப் போதுமானது என இதுவரை

கண்டுபிடிக்கப்பட்ட வளங்களின் அடிப்படையிலான கணிப்பீடு கூறுகின்றது. இப் பிராந்தியத்தின் பிரதான பொருளாதார நடவடிக்கை பண்ட உற்பத்தியில் அது பிரதானமாக பெட்ரோலிய ஏற்றுமதியாகும். இந்த பெட்ரோலிய ஏற்றுமதியால் வரும் பணம் இந்நாடுகளின் கொள்வனவு சக்தியினை உயர்நிலையில் வைத்திருக்கும். பண்ட உற்பத்திக்குத்தான் சமாதானம் அடிப்படையானதே தவிர பெட்ரோலிய ஏற்றுமதியினை இராணுவ பலத்தின் மூலமாகவும் கையாளுதல் சாத்தியமானது. எனவே இப்பிராந்தியத்தில் சண்டை நடப்பது அங்கு உள்ளூரில் நிகழக்கூடிய பண்ட உற்பத்தியினைப் பாதிக்குமே தவிர, ஒப்பீட்டு ரீதியில் பண்ட இறக்குமதியினையும் பண்ட வர்த்தகத்தினையும் பெரிதும் பாதிக்காது.

இப்பிராந்தியத்தில், மேற்குலகமும் அதைச்சார்ந்த இஸ்லாமிய நாடுகளும் இராணுவ உயர்நிலையில் இருப்பதால் பெற்ரோலியப் பொருட்களைப் பெறுவதில் மேற்படி இருமதப் பிரிவுகளுக்கு இடையேயான சண்டைகள் அன்றி தொழிற்பட்டு வருகின்றன. அப்படித் தோன்றும் பட்சத்தில் 22 இஸ்லாமிய நாடுகளில் சக்தி வாய்ந்த சில அரபு நாடுகளைப் பயன்படுத்தியே இஸ்லாமிய அரசுக்கு எதிரான யுத்தத்தினை நெறிப்படுத்த மேற்குலகால் முடியும். ஏனெனில் இந்த 22 இஸ்லாமிய நாடுகளில் ஒரு நாடு கூட இன்னொரு இஸ்லாமிய நாட்டுடன் இணைய முடியாத வரலாற்றினையே கடந்த காலத்தில் இருந்து இன்று வரை கொண்டுள்ளன.

இங்கு மேற்படி அனைத்து நாடுகளிலும் வாழும் முஸ்லிம்களிடம் இஸ்லாமிய வாதம் இருந்தாலும் அவை பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய இஸ்லாமிய தேசிய வாதமாக அமையாமல் தனித் தனியே அரசவாதமாக பிளவுண்டுள்ளன. தேசியவாதம் என்பது வெறுமனே மொழிவாதமோ மதவாதமோ அல்ல. மொழி அல்லது மதம் அல்லது வேறுபண்பாடடுப் பொதுமை ஒரு குறியீடாக அமைய ஜனநாயகம் என்பது அந்த மக்களை மண்ணுடனும் மற்றும் இயற்கையுடனும் இணைத்து அந்த மக்களை அரசியல் அதிகாரத்தில் பங்காளிகளாக்கி அங்கு ஒரு தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகின்றது. ஆனால் அப்படியொரு ஜனநாயக மரபு தழைக்காத வரை அரச அதிகாரத்தினை பங்கு போடுவது பற்றிய பிரச்சினையினை தீர்க்க முடியாது. அவ்வாறு தீர்க்க முடியாத பட்சத்தில் சிறு சிறு அரச பீடங்களை பாதுகாக்கும் அரசவாதம்தான் மேலோங்கி நிற்க முடிகின்றதே தவிர மத அடிப்படையிலோ அல்லது மொழி அடிப்படையிலோ எழக்கூடிய அங்கு அனைவருக்கும் பொதுவான ஒரு தேசியம் தலையெடுக்க முடியாது போகின்றது.

எண்ணெய் வளம் ஒவ்வொரு அரசினையும் தனித்தனியே பொருளாதார ரீதியில் அதன் சொந்தக் காலில் நிற்பதனை சாத்தியமாக்குகின்றது. இதனால் பல்வேறு பிராந்தியங்களையும் சேர்த்து துண்டு துண்டாக இருக்கும் மக்களை ஒன்றிணைத்து ஒரு திரளாக்குவதற்கான ஒரு பொருளாதார நிர்ப்பந்தமோ அல்லது பல அரசுகளுக்குமிடையேயான பொருளாதார ஒட்டிணைப்போ ஏற்பட வேண்டியதற்கான நிலைமை இல்லை. பிரதானமாக இஸ்லாமிய நாடுகளின் பெட்ரோலிய வளம் தான் இந்த 22 இஸ்லாமிய நாடுகளையும் ஒன்றிணையத் தேவையில்லாத புற நிலை யதார்த்தத்தினைக் கொடுத்துள்ளன. பண்ட உற்பத்தி சார்ந்த மூலவள விநியோகமும், சந்தை வாய்ப்பும் இணைந்து இவ்வரசுகளை ஒன்றாக இணைத்திருக்க முடியும். ஆனால் அப்படி பண்ட உற்பத்தியில்லாத பெட்ரோலிய வள ஏற்றுமதிப் பொருளாதாரம் இந் நாடுகளுக்கு அடிப்படையாக இருப்பதனால் இந்நாடுகள் ஐக்கியப்பட்டு ஓர் அரசாக உருவெடுப்பதற்கான பண்ட உற்பத்தி சார்ந்த புறநிலைப் பொருளாதார யதார்த்தம் இல்லை.

இவ்வாறு இஸ்லாமிய நாடுகள் துண்டுபட்டு இருப்பதையே மேற்குலக வல்லரசுகள் விரும்புகின்றன. இவர்கள் வெளிப்படையான வார்த்தைகளில் மேற்படி மத்திய கிழக்கில் இஸ்லாமியர்கள் மத்தியில் நடக்கும் யுத்தங்களை விரும்பாதவர்கள் போல காட்டிக் கொண்டாலும் மறைமுகமாக இவ் யுத்தங்களை அனைத்து வல்லரசுகளும் விரும்புகின்றன. மத்திய கிழக்கில் நிலவும் இஸ்லாமிய கலாச்சாரத்தினை முதலீடாகக் கொண்ட நாடுகளை பிளவுபட்ட அரசுகளாக வைத்திருக்கவே மேற்படி வல்லரசுகள் அனைத்தும் விரும்புகின்றன. எனவே மத்திய கிழக்கின் தனது மேலான தமது யுத்தத்தை அந்நாடுகளுக்கு ஊடாகவே முன்னெடுக்கும் உத்தியினை வல்லரசுகள் விரும்புகின்றன. ஆதலால் இந்தப் பூமியில் ஏனைய பகுதிகளில் அமைதி நிலவினாலும் பூகோளம் தழுவிய அரசியல் பொருளாதாரத்தின் மையமாக விளங்கும் மத்திய கிழக்கும் அதைச் சார்ந்த பகுதிகளும்

ஏதோ ஒரு வகையில் இந்த முழு உலகத்திற்கான யுத்தத்தின் கொதிமையமாக வைத்திருக்கப்படுகின்றன.

**கலந்துரையாடல் மற்றும் கண்டுபிடிப்புக்கள்**

இஸ்லாமிய அரசுகளே பிற இஸ்லாமிய அரசுகளை அழிப்பதில் ஊக்கிகளாகத் திகழ்கின்றன. அரபு உலகு ஒற்றுமைக்குப் பதிலாக பகைமையினை வளர்த்து வருகின்றது. உதாரணமாக

பாலஸ்தீனத்திற்கு எதிராக எகிப்து, ஜோர்டான், டுனீசியா, மொரோக்கோ என்பன இஸ்ரேல்-அமெரிக்க கூட்டுக்கெதிராக செயற்பட்டது போல் இஸ்லாமிய நாடுகளுக்கும் நாகரிகத்திற்கும் எதிராக மேற்குலக வல்லரசுகளின் செயற்பாடுகளுக்கு எதிராக அணிதிரள வேண்டும். அடுத்து இஸ்லாமிய நாகரிகத்தின் மீது எழுந்துள்ள பயங்கரவாதம் என்ற மேற்குலகின் திட்டமிட்ட பிரச்சாரத்தினை முறியடிக்க வேண்டும். மகத்துவமிகு அல்குர்ஆன் அரபு மொழியிலிருந்து அனைத்து பிராந்திய வட்டார மொழிக்கும் மொழிபெயர்த்து விநியோகிக்கப்பட வேண்டும். இஸ்லாம் என்பது இறைவனிடம் சரணடைதல் என்ற பொருள் பரப்பப்பட வேண்டும். அஸ்லாமு அலைக்கும் என்பது உங்களுக்கு சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும் என்னும் அர்த்தம் புரியப்பட வேண்டும். இஸ்லாத்தின் புனிதத்தன்மையும், அதன் உண்மை வாழ்க்கையின் அர்த்தத்ததையும் புரியப்பட வேண்டும்.

ஆபிரிக்காவுக்குள்ளும் ஆசியாவுக்குள்ளும் ஐரோப்பாவுக்குள்ளும் பரவியிருக்கும் இஸ்லாமியர்கள் வேறுபட்ட புவியியல் சார் அமைப்புக்குள் வாழ்கின்றமையினால் வேறுபட்ட மரபுரிமைவாத பண்பாட்டின் இயல்புகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுகின்றது. இது தவிர்க்க முடியாத நிலையாகும். எனவே சர்வதேச பிராந்திய மட்டத்திலான பொது நலனை கருத்தில் கொள்வது அவசியமானது.

இஸ்லாம் நிற, இன, குல, தேசிய உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட சகோதரத்துவ அரசியல் அமைப்பினை ஏற்படுத்துவதனை அனைத்துலக முஸ்லிம் நாட்டுத் தலைவர்களும் உணர வேண்டும். அறபிகளுக்கும் அறபியல்லாதவர்களுக்கும் இடையே எவ்வித வேற்றுமையினையும் பாராது உறவினைக் கட்டியெழுப்ப வேண்டும். முஸ்லிம் நாடுகளில் ஒன்றுக்கு ஆபத்து ஏற்படுமாயின் எல்லா முஸ்லிம் நாடுகளுக்கும் அது ஏற்பட்டதாகக் கருதி செயற்பட்டால் தான் உண்மையான சகோதரத்துவம் நிலைபெற முடியும்.

மேற்குலக பேரலைக்குள் கீழத்தேயப் பண்பாடுகளை ஆதிக்கம் செய்ய பொருள் வயமான வாழ்க்கையை பயன்படுத்திக்கொண்டன. முதலில் இஸ்லாமிய நாட்டுத் தலைவர்களை தமது நிதி மூலங்களால் அடிமைப்படுத்தினார்கள். பின்பு தமது வங்கி அமைப்புக்களினாலும் பொருளியல் இயந்திரத்தின் மூலமாகவும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்பு அரசாங்கம், நீதி, கல்விக் கோட்பாடுகளில் மேற்குலக நடைமுறைகளைப் புகுத்தினர்.

ஆற்றல் வாய்ந்த இஸ்லாமிய நாடுகளில் கூட தமது எண்ணங்களைப் புகுத்த முடிந்தது. இப் பிரதேசங்களில் நீலப்படங்களையும், மதுக்கோப்பைகளையும், கேளிக்கை களியாட்டங்களையும் தமது செய்திகளையும் எல்லையற்று பரப்பினார்கள். இஸ்லாமிய நாடுகளில் அறிவியல் பண்பாட்டு நிறுவனங்களை நிறுவினர். இஸ்லாமிய மக்களிடம் ஐயத்தினையும் முரண்பட்ட கருத்துக்களையும் பரப்பினர். தம்மைத்தாமே எப்படி தாழ்த்திக் கொள்வது தமது மதத்தை எப்படி இழிவுபடுத்துவது, மரபுகளிலிருந்தும் நம்பிக்கைகளிலிருந்தும் எப்படி விலகி வாழ்வது என்பதனையும் கற்றுக்கொடுத்தனர். இதன் விளைவே அரபுலக புரட்சியாகும். இதனை வளரவிடாது தடுக்க வேண்டுமாயின் இஸ்லாமிய நாகரிகம் மீள் உருவாக்கத்திற்குள் இணைக்கப்பட வேண்டும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


இஸ்மியா பேகம், எஸ். (2013), இஸ்லாமிய நககரிகமும் பிற நாகரிகங்களும்'', இலங்கை:

இஸ்லாஹியா வெளியீட்டு மையம்.

யூஸுப் அல்-கரனாவீ, (1989) ''நிராகரிப்புக்கும் தீவிரவாதத்திற்கும் மத்தியில் இஸ்லாமிய

எழுச்சி'', ஐக்கிய அமெரிக்கா: இஸ்லாமியச் சிந்தனைக்கான சர்வதேச

நிறுவனம்.திருநாவுக்கரசு, மு. (2018),''பூகோளவாதம் புதியதேசியவாதம்'', இலங்கை-

பிரித்தானியா :தமிழாய்வு மையம்

திருநாவுக்கரசு,மு. (2008),''ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும்'',

தமிழியல், லண்டன்: காலச்சுவடு பப்பிளிக்கேசன்

அனஸ், எம். (2018),''அரபுலக மக்கள் எழுச்சி'', கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

அனஸ்,எம். (2012), ''தற்கால இஸ்லாமியச் சிந்தனை'', இந்தியா: அடையாளம்.

கணேசலிங்கம், ரீ. (2013),''சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்'', கொழும்பு : சேமமடு பதிப்பகம்.

ரஸீத்,எம். (2014), ''பலஸ்தீன் ஓர் ஈமானியப் பார்வை'', கொழும்பு: மீள்பார்வை ஊடக மையம்.

காலிதீன்,எச். ''இஸ்லாம்-முஸ்லிம் சமூகம்-முஸ்லிம் உலகம் ஒரு மதிப்பீடு'', இலங்கை:

இலங்கை கதீப்மார்கள் சம்மேளனம்.

Source:https://www.thinglink.com/scene/704426883768385537


எம்.எஸ்.இஸ்மியா பேகம், இஸ்லாமிய நாகரிகமும் பிற நாகரிகங்களும், பக்24